பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

இந்த
மலையைப் பார்த்து:
நீ பெயர்ந்து,
சமுத்திரத்திலே
தள்ளுண்டுபோ
என்று சொல்லி,
........... இருதயத்தில்
சந்தேகப்படாமல் விசுவாசித்தால்,
அவன் சொன்னபடியே ஆகும்.....

மாற்கு 11:23

செய்தி மலர்
2015
செப்டம்பர்

இதழ் : 4
மலர் : 16



# தலைவர் உரை

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்களை கூறிக்கொள்கிறேன்.

தேவனுடைய பெரிதான கிருபையால் இந்த 2015 ஆம் வருடத்தின் ஒன்பதாம் மாதத்தில் பிரவேசிக்கும் பாக்கியத்தை தேவன் நமக்கு தந்தபடியால் கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

கடந்த மாதத்தில் சபையின் மூலம் நடந்த ஊழியங்கள்,ஆராதனைகள்,ஜெப கூடுகைகள், எல்லாவற்றிலும் தேவ பிரசன்னம் இருந்ததையும், மேலும் நமது தனிப்பட்ட வாழக்கையிலும், குடும்ப வாழ்க்கையிலும், தேவ வழிநடத்துதல் இருந்ததையும், நினைத்து தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.

நமக்கு தேவன் இந்த வருடத்தில் கொடுத்த வாக்குத்தத்தத்தின்படி சேனைகளின் கர்த்தர் நம்மோடு கூட இருந்து நடத்தி வருகிறார்.

இந்த மாதத்தில் "எவனாகிலும் இந்த மலையை பார்த்து நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி தான்சொல்லிய படியே நடக்கும் என்று நான் உங்களுக்கு சொல்லுகிறேன்"(மாற் 11:23)

பிரியமானவர்களே ஆண்டவர் இயேசு தமது சீஷர்களிடத்தில் விசுவாசத்துடன் ஜெபம் பண்ணுவதை குறித்து, போதிக்கும் போது மலையை பார்த்து பேசுங்கள் என்கிறார்.

மலை என்பது பெரிய பிரச்சனைகள், இப்படிபட்ட பெரிய பிரச்சனைகளை பார்த்து நாம் பேச வேண்டும். குடும்ப வாழ்க்கையில், வேலை ஸ்தலங்களில் வியாதிகளில், சில வேளைகளில் நமக்கு முன்பாக மலை போல பெரிய பிரச்சனைகள் இருப்பதை போல தெரியலாம். ஆனால் அந்த பிரச்சனைகளை பார்ப்பதற்கு முன்பாக நமக்கு முன் இருக்கும் தேவனை பார்க்க வேண்டும். அவருக்கு வானத்தை சிங்காசனமாக போட்டாலும் போதாது அவ்வளவு பெரியவர் நம்மை படைத்த தேவன்.

அவருக்கு நாம் பிள்ளைகள் என்ற அந்தஸ்தை கொடுத்திருக்கிறார். அதற்கு ஆண்டவராகிய இயேசு முழு கிரயமாக, தமது இரத்தத்தை சிந்தியிருக்கிறார். ஆனபடியால், அந்த பிரச்சனையை பார்த்து பேச வேண்டும், கண்டிப்பாக இந்த பிரச்சனையை தேவன் மாற்றுவார் என்ற விசுவாசம் வேண்டும். அது போல நான் தேவனுடைய பிள்ளை ஆனபடியால நான் சொல்லுகிறபடி நடக்கும் என்ற விசுவாசம் வேண்டும்.

தேவன் அப்படிபட்ட வல்லமையை தேவ பிள்ளைகள் வாயில் வைத்திருக்கிறார். நீ எவர்களை ஆசிர்வதிக்கின்றாயோ அவர்கள் ஆசீர்வாதமாய் இருப்பார்கள், பிரச்சனைகள் தோல்விகளை பார்த்து பயப்படவேண்டாம். அவைகளை பார்த்து பேச வேண்டும் அவைகள் நிச்சயமாய் மாறிப்போகும் .

நம் ஜெபம் கேட்க வேண்டுமானால் மற்றவர்களுடைய தப்பிதங்களை நாம் மன்னிக்க வேண்டும். நீங்கள் நின்று ஜெபம் பண்ணும் போது, ஒருவன் பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்தில் இருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி அந்த குறையை அவனுக்கு மன்னியுங்கள். (மாற் 11:25)

ஒரு வேளை நான் சொன்னபடியே நடக்கும், தேவன் என் பிரச்சனையை மாற்றுவார் என்ற விசுவாசம் இருக்கலாம் ஆனால் ஜெபம் பண்ணும் போது மற்றவர்களின் தப்பிதங்களை நாம் மன்னிக்காவிட்டால், நம்முடைய தப்பிதங்களை தேவன் நமக்கு மன்னிக்கமாட்டார், தேவன் நம் பாவங்களை மன்னிக்காவிட்டால் நமது ஜெபங்களை கேட்க முடியாதபடி நம் பாவங்கள் நம்மை மறைத்து விடும், ஆனபடியால் நமது பிரச்சனைகள் மாற நம்மிடம் தேவன் எதிர்பார்ப்பது

1. தேவன் பெரியவர் அவர் எல்லாவற்றையும் ஒரு இமை பொழுதில் மாற்றுவார் என்ற விசுவாசம் .

2. நான் தேவனுடைய பிள்ளை இயேசு சிந்திய இரத்தத்தின் மூலம் இவருடைய பிள்ளையாய் மாற்றப்பட்டேன் என்ற விசுவாசம் .

3. மற்றவர்களின் தப்பிதங்களை நான் மன்னித்திருக்கிறேன் ஆனபடியால் என் பாவங்களுக்கும் மன்னிக்கபட்டிருக்கிறேன் என்ற நம்பிக்கை

பிரியமானவானவர்களே! நம்மை படைத்தவர் எல்லாவற்றிலும் பெரியவர் நம் ஆண்டவர் அவர் நம்மை முடிவு பரியந்தம் நடத்தி செல்வார்

தேவன்தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரன்

R. ரவிச்சந்திரன்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு தாங்கள் நேர்ந்து கொண்ட காணிக்கைகளை, திக்கற்ற பிள்ளைகளின் ஊழியத்திற்கென்று சகோதரர் எபிநேசர் அவர்களிடத்திலும், இந்திய தேச ஊழியர்களை தாங்கும் ஊழியத்திற்கென்று சகோ. ஆரோக்கியராஜ் அவர்களிடத்திலும், போக்குவரத்து(Transport) ஊழியத்திற்கென்று சகோ. வில்ஸன் அவர்களிடத்திலும், தங்களது காணிக்கைகளை கொடுத்து ஊழியத்தை தாங்கும்படி பணிவண்புடன் கேட்டு கொள்கிறோம் (மறவாமல் ரசீது பெற்று கொள்ளவும்)

## நற்செய்தியை கொண்டாடுதல்

## CELEBRATION THE GOOD NEWS

**ஆதி 18:1- 15 எபி 2: 1 லூக்கா1:39-56**

**அப்பொழுது மரியாள் என் ஆத்துமா கர்த்தரை மகிமைபடுத்துகிறது.என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூறுகிறது.(லூக்கா 1:46,47)**

முன்னுரை : நற்செய்தி என்ற சொல்லை திருமறையின் ஒளியில் நன்கு புரிந்து கொண்டால் மட்டுமே நற்செய்தியை கொண்டாடமுடியும். திருமறையை ஒரு நற்செய்தி நூலாகத் தொகுத்த காலத்திலிருந்து மக்கள் ஏற்றுக்கொண்டு கடவுள் செயல்பாடுகளை கண்டு வியந்து கடவுளை போற்றுவதும், அவரின் சொற்படி வாழ்வதும் கொண்டாட்டமாக கருதப்பட்டு வருகிறது. கடவுளின் படைப்பிலிருந்து நற்செய்தி துவங்குகிறது. கடவுளின் படைப்பிற்கு மனிதன் செலுத்தும் நன்றியே கொண்டாட்டமாகும். ஆபிரகாம் வாழ்க்கையில் கடவுளின் செயல்பாட்டை கண்டு, கடவுள் தன் விருப்பப்படி குழந்தை செல்வத்தை கையளிக்க விரும்புகிறார். ஆபிரகாம் சாராள் இருவரும் அதை செய்தியாக கருதினார்கள் (ஆதி 18:1:15) கடவுள் தாம் படைத்த உலகம் மற்றும் மனித குலத்தை பாவத்திலிருந்தம் அடிமைதனத்திலிருந்தும் ஏற்ற தாழ்வுகளிலிருந்தும் அழிவிலிருந்தும் விடுவிப்பதற்காக தம் திருமகனை இவ்வுலகத்திற்கு அனுப்ப திட்டமிட்டார். கடவுளின் மீட்புபணிக்காக அவரின் மீது நம்பிக்கை வைத்த மக்கள் கடவுளின் வருகைக்காக காத்திருந்தனர் கடவுளின் மீட்பின் வருகை முழு மனித குலத்திற்கும், இயற்கை அனைத்திற்கும் முழுமையான விடுதலையாகவும் நற்செய்தியாகவும் அமைந்துவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது(ஏசாயா 11:1-9)இறைவனின் வியத்தகு திட்டத்தில் சகரியா, எலிசபெத், யோசேப்பு, மரியாள், முழுக்கு முனிவர் யோவான் , ஆன்மீக தந்தை சிமியோன், தீர்க்கதரிசியாகிய அன்னாள், இறை தூதர்கள், மேய்ப்பர்கள், சாஸ்திரிகள், போன்றவர்கள் பயன்படுத்தப்பட்டனர். மட்டுமல்லாமல் விண்மீன் மற்றும் புல்லணை ஆகியவை அடையாளங்களாயின. இறைவனின் திட்டத்தில் பங்களிப்பு யோசேப்பு , மரியாள் இருவருக்கும் இறை தூதுவர்கள் வழியாக இறைவன் அழைப்பு விடுத்தார். இறை தூதுவர்கள் கொடுத்த அழைப்பை ஏற்றுக்கொண்ட மரியாள், தம்மை இறைவனுக்கு அடிமையாகக் கையளிக்கிறார். (லூக் 2:27-38) இறைதூதுவரின் அறிப்பை நற்செய்தியாக மரியாள் ஏற்று அதை கொண்டாடுவதே "மரியாளின் பாடல் " என திருமறையும் திருச்சபையும் நமக்கு கற்றுதருகின்றன. நற்செய்தியை கொண்டாடுவதிலிருக்கும் ஆன்மீக உண்மைகளை கீழ்குறிப்பிடும் கருத்துகளின் அடிப்படையில் புரிந்து கொள்ளலாம்.

**இரக்கத்தின் நற்செய்தியை கொண்டாடுவோம். (லூக் 1:50,54)**

இறைவனின் இரக்கமே நற்செய்தியாகும். இறைவன் தம்முடைய திருமகனை இவ்வுலகிற்கு கையளிப்பது இரக்கத்தின் வெளிப்பாடமாகும். இவ்வுலகை மீட்டு கொள்ள இறைவன் இயற்கை, மனிதன் மற்றும் அனைத்தின் மீதும் இரக்கம்

கொண்டார். இயற்கையையும் மனிதனையும் அழிப்பது இறைவனின் திட்டமல்ல மாறாக அவைகள் மீது இரக்கங்கெண்டு அவைகள மீட்டுக் கொள்வது அவரின் திட்டமாகும் இறைவனின் இத்திட்டத்தை நிறைவேற்ற தம் திருமகனை அனுப்ப மரியாளை தெரிந்து கொள்கிறார். இறைவனின் திட்டத்திற்குறிய பாத்திரமாக தாம் தெரிந்து கொள்ளபட்டதை இறை தூதுவர்கள் சொல்லிய போது மரியாள் தாம் தெரிந்தகொள்ளபட்டிருப்பது தனது நீதியை முன்னிட்டும் தனது செல்வாக்கை முன்னிட்டும் நிகழாமல் இறைவனின் இரக்கத்தை அடிப்படையாக கொண்டு நிகழ்ந்ததாக பாடுகிறார். முழுக்கு முனிவர் யோவானின் பிறப்பை குறித்தும் அறிவிக்கும் போதும் இறைவனின் இரக்கத்தால் நிகழ்ந்ததாக சகரியா குறிப்பிடுகிறார் (லூக்கா 1:77) சகரியா யோவானின் பிறப்பை இரக்கத்தின் நற்செய்தியாக கொண்டாடுகிறார் நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மலை பொழிவிலும் இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் இரக்கம் பெறுவார்கள் என்பதை மத் 5:7ல் படிக்க முடிகிறது ஆகவே இறைவன் நம்மீதும் இயற்கையின் மீதும் வைத்திருக்கின்ற இரக்கத்தை நினைத்து எப்பொழுதும் நன்றி கூறி நற்செய்தியாக கொண்டாடுவோம்.

2. இறையாற்றலின் நற்செய்தியைக் கொண்டாடுவோம் : (லூக்கா 1:51-53)
இறைவனின் இரக்கம் இறையாற்றலாக வெளிபடுகிறது, இறைவனின் ஆற்றல் குறுகிய எல்லைகள், குறுகிய வட்டங்கள், குறுகிய எண்ணங்கள், சுயநலங்கள், போன்றவைகளை தாண்டி செயல்படுகிறது. என்ற நற்செய்தியை மரியாள் தம்முடைய பாடலின் வாயிலாக வெளிபடுத்தி கொண்டாடுகிறார். எப்படியெனில் மேசியாவின் வருகையை பற்றிய யூதர்களின் எதிர்நோக்கு மிகவும் குறுகலானது சிந்தனையின் அடிப்படையில் அமைந்திருந்தன. அவர்கள் வகுத்திருந்த எல்லைக்குள் இறையாற்றல் நிகழ்ந்துவிடும். அதாவது மேசியா வருகை நிகழ்ந்துவிடும் என நம்பிக்கை கொண்டனர். ஆனால் இறையாற்றல் இருதய சிந்தனையில் அகந்தையும், இறுமாப்பும், வெளிவேடமும், பொறாமையும் உள்ளவர்களை சிதறடித்து இறுமாப்பாய் ஆளுகிறவர்களின், ஆசனங்களை கவிழ்த்து அவர்களை வெளியே துரத்தி,தாழ்மையுள்ளவர்களை ஆசனங்களில் அமர்த்தி அவர்களை உயர்த்தி, பசித்தவர்களை நன்மைகளினால் நிரப்பி, செல்வச் செருக்குடையோரை வெறுமையாய் அனுப்பிவிடும் ஆற்றல் வாய்ந்த ஒன்றாகும். ஆகவே சமூக , சமய , அரசியல், பொருளாதாரம் சார்ந்த மாற்றங்கள் தருகின்ற இறையாற்றலை நாம் இன்று நற்செய்தியாக கொண்டாட வேண்டும் நாம் வாழும் உலகில் காணப்படும் அநீதிகளை, ஊழல்களை ஆன்மீக வெளிவேடங்களை அகற்றும் இறையாற்றலை' கண்டு அதை நற்செய்தியாக ஏற்றுக் கொண்டாட வேண்டும்.

3. இறையரசின் நற்செய்தியைக் கொண்டாடுவோம் .(லூக்கா 1:55)

கடவுளின் இரக்கம் இறையாற்றலாக வெளிபட்டு இஸ்ரயேலர் இறையரசை நோக்கி காத்திருக்கிறவர்கள் அவர்களின் நோக்கம் என்னவெனில் இறைவன் தம்முடைய தாசனின் தாவீது வாயிலாக நல்லாட்சி வழங்கியிருந்தார். தாவீதின் ஆட்சியை மக்கள் கடவுளின் நேரடி ஆட்சியாக கருதி மகிழ்ச்சியோடு வாழ்ந்தார்கள்.

தாவிதின் காலத்திற்கு பிறகு வந்த அரசர்கள் மற்றும் ஆட்சியாளர்கள் இறைவனை புறக்கணித்துவிட்டு செயல்படுவதாக மக்களிடம் எடுத்துறைத்து விட்டு தங்கள் விருப்பப்படி சுகபோகமாக வாழ்ந்தார்கள். இவர்களின் சுகபோக வாழ்விற்கு சமைய தலைவர்களும், சமயச்சட்டங்களுக்கு ஆதரவும் விளக்கமும் கொடுத்தன. இச்சூழலில் தாவீதின் ஆட்சியை எதிர்பார்த்த எளிமையான இஸ்ரயேலர் நம்பிக்கையுடனும், நல்எதிர்நோக்குடன், இறை நம்பிக்கையுடனும் வாழ்ந்து வந்தார்கள். இத்தகையோரின் நம்பிக்கையும், நேர்மையும், உண்மையும், எளிமையும், வீண் போகவில்லை என்பதை, வெளிபடுத்தும் வகையில். மரியாள் தன்னுடைய தாசனாகிய இஸ்ரயேலை ஆதரித்தார் என்ற (லூக் 1:55) இறையரசின் நற்செய்தியை வெளிபடுத்தி இஸ்ரயேலுக்கு நற்செய்தியை கூறி கொண்டாடும்படி அறைகூவல் விடுக்கிறார். நாம் வாழும் சூழலில் உண்மையான இஸ்ரயேலரை போல இறைவனின் ஆட்சியை எதிர்நோக்கியிருப்பவர்கள் மரியாளின் பாடல் அறைகூவல் போன்று நற்செய்தியை கொண்டாடி மகிழ்வோம். பிறருக்கு நற்செய்தியை எடுத்துறைப்போம். நற்செய்தியாக வாழ்வோம்.

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரர் –டென்சிங்

## சிறந்ததை கொடுங்கள் இயேசுவை காணலாம்

சிற்பி செதுக்க, செதுக்க
இனியும் சிற்பமாகும்

எழுத்தாளன் எழுத எழுத
எண்ணங்கள் இறைவனாகும் – அப்பா

தேவ வார்த்தை படிக்க படிக்க
விசுவாசம் உறுதிப்படும்

விசுவாசத்தில் வளர வளர
கிருபை பெறுகும்

கிருபை பெருக,பெருக
கிரியை செய்யக்கூடும்

கிரியை செய்ய செய்ய
ஆத்துமா வாழும்

ஆத்மா வாழ வாழ
மனம் சிறந்ததை கொடுக்கும்

மனம் சிறந்ததை கொடுக்க
இயேசு உன்னோடு

தொகுப்பு
கிறிஸ்துவுக்குள்
அன்பு சகோதரன்

**எபிநேசர்**

# தியாக தீபம்

தகப்பன் இல்லாத குடும்பத்தில் மூன்று பெண் பிள்ளைகளையும் வளர்த்து ஆளாக்கும் பொறுப்பு அன்பு தாய் வசம் இருந்தது. பிள்ளைகளை பக்தியிலும் ஒழுக்க நெறிகளையும் கற்று கொடுத்து, சிறந்த கல்விக்கும் ஏற்பாடு செய்தார்கள். பட்டம் பெற்ற தன் மூத்த மகளை இயேசுவை அறியாத மக்கள் மத்தியில் அவர் அன்பை அறிவிக்கும் உன்னத பணிக்கு அனுப்பி வைத்தார்கள். பணிவிடை காலத்திலே அன்பு மகள் மரித்திட, அழுது கொண்டிருந்த மக்களை பார்த்து "கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்துக்கொண்டார்" என்று ஆறுதல் வார்த்தை கூறினார்.

என் மூத்த மகள் தொடங்கிய ஆத்தும ஆதாய பணி இன்னும் முற்று பெறவில்லை எனவே என் இரண்டாவது மகளையும் அனுப்பி வைக்கிறேன் என்று சொன்ன வார்த்தைகள், அனைவர் உள்ளங்களையும் கொதிக்க வைத்தது, பணித்தளத்தில் அன்பு மகளும் உயிர்பலி ஆனாள்,

பிதாவின் மிக பெரிய தியாகம் இயேசுவையே உலகத்திற்கு தந்தது கிறிஸ்துவின் சிலுவை மரணம் மனுகுலத்திற்கு மீட்பை தந்தது இந்த வசனங்களை மனதில் அசைபோட்ட தாய் தனது மூன்றாவது மகளையும் போர்களமாம் பணிகளம் அனுப்பி வைத்தார். அந்த மகளும் தேவனுடைய பணிகளை நிறைவேற்றும் நாட்களிலே தேவனிடம் எடுத்து கொள்ளபட்டார்.

அடக்க ஆராதனையில் அந்த தியாக தீபம் அடக்கி கொள்ள கூடாதபடி அழுதார். கூடியிருந்த ஜனங்கள் வியப்புக்கும், கேள்விக்கும் பதில் கொடுத்த புரட்சிதாய். என் மூன்றாவது மகளையும் கர்த்தர் எடுத்துக் கொண்டார் என்று அழவில்லை, தேவை மிகுந்த உலகில் கிறிஸ்துவை அறிவிக்க இன்னொரு பிள்ளை எனக்கு இல்லையே என்றுதான் என் ஆளாத்துயர் என்றார்களாம் .

இந்த உண்மை சம்பத்தை வாசிக்கின்ற அன்பு உள்ளங்களே!

உங்கள் பதில் என்ன?

சுவிஷேசம் சொல்லாவிட்டால், ஐயோ

ஜனங்கள் அழிந்து பேவார்

சுவிஷேசம் என் மூச்சு, அதுவே என் முதல் கடமை

இவன்
கிறிஸ்துவின் பணியில்

**S. ஆல்பர்ட்**

# கேள்வியும் பதிலும்

**கேள்வி :**

பாஸ்டர், ஆவி , அத்துமா, சரீரம், ஒரு விளக்கம் கூறுங்களேன். உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு ஆத்துமாவோடும். உன் முழு பெலத்தோடும், உன் முழு சிந்தையோடும் அன்பு கூறு என்று லூக் 10:27ல் சொல்லபட்டதின் பொருள் என்ன?

## பதில்

மனிதன் ஆவி ஆத்துமா சரீரம் என்கிற மூன்று பகுதிகளுடைய ஒரே மனிதன் எப்படி முட்டை என்கிற ஒன்றில் வெள்ளை கரு, மஞ்சள்கரு, ஒடு, ஆகிய மூன்றும் சேர்ந்ததை முட்டை என்று அழைக்கிறோமோ, அப்படி என புரிந்து கொள்ளுதல். உன் தேவனாகிய கர்த்தரை உன் முழு இருதயத்தோடு என்கிறதற்கு – உன் உளமாற– உள்ள பூர்வமாக என்றும், உன் முழு மனதோடு என்பதற்கு – நல் மனசாட்சியோடு – திட்டவட்டமான – தீர்மானத்தோடு என்றும், உன் முழு ஆத்துமாவோடு என்பதற்கு,– உன் உணர்ச்சிகளோடும் – உற்சாகத்தோடும். என்றும் , உன் முழு பெலத்தோடும் என்பதற்கு, உன் உடல் உறுப்புகளை பயன்படுத்தி (கை தட்டி, பாடி, முழுங்காலிட்டு, போன்ற உடல் பெலத்தையும் சேர்த்து ஆராதிக்க வேண்டும், என்பது பொருள். உன் முழு சிந்தனையயோடு என்பதற்கு – நாம் செய்வதை, துதிப்பதை, ஆராதிப்பதை நினைவில் கொண்டு செயல்பட வேண்டும், அதாவது நாம் ஆலயத்திலிருந்து கொண்டிருந்தாலும் நமது சிந்தனை ஊர் சுற்றிக்கொண்டிருக்கும், ஆராதனை போலியாய் இருக்ககூடாது என்று பொருள்படும்.

விளக்கமாக சொல்வோமாகில் எபி 10 :16–ஐ வாசித்தால் "நான் என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய இருதயங்களில் வைத்து, அவைகளை அவர்களுடைய மனதில் எழுதுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று வாசிக்கிறோம். இங்கே இருதயம் மனம் என்ற இரண்டும் ஒரே பொருளை குறிக்கிறது என்று வைத்துக் கொண்டாலும் அதின் அர்த்தம் வேறாய் இருக்கிறது. என் பிராமணங்களை அவர்கள் இருதயத்தில் வைப்பேன் என்றது – அவர்களது நினைவுகளில் அல்லது ஞாபகத்தில் (In Memory) வைப்பேன் என்றும், மனதில் என்பதற்கு "மனம் இருந்தால் மார்க்கமுண்டு" என்பார்களே. அது போல விருப்பம் இருந்தால் நீங்கள் செய்ய முடியும் என்பதை போல என் பிரமாணங்களை அவர்கள் மனதில் எழுதுவேன் என்பதன் பொருள்– அவர்களின் விருப்பத்தில் கொண்டு வந்து அவர்களை கை கொள்ள பண்ணுவேன் என்பதே.

நாம் 1000 வசனங்களை படித்து ஞாபகத்தில் வைத்திருக்கலாம் ஆனால் அவைகளின்படி செய்ய விருப்பம் உண்டானால் மாத்திரமே அவைகளை கை கொள்ள முனைவோம் என்பதை, இவ்வசனம் (கர்த்தர்) நமக்கு நினைவுறுத்துகி(றார்)றது என்று அறிவோமாக .

# 2015 – ஜுலை மாத விடைகள்

1. ஏசாயா – ஏசாயா 1: 4 – 2. ஏசாயா – ஏசாயா 26:2–

3. ஏசாயா – ஏசாயா 51: 20

4. இஸ்ரவேலில் தள்ளுண்டவர்களுடைய காவற்காரர் 56:8,10–

5. ஏசாயா – ஏசாயா 22:4

6. துன்மார்க்கர் – ஏசாயா 57:20– 7. ஏசாயா – ஏசாயா 20:2

8. யாக்கோபு வம்சத்தார் – ஏசாயா 22:4– 9. ஏசாயா – ஏசாயா 30:18

10. சோவான் – ஏசாயா 19:11 – 11. கோரேஸ் – ஏசாயா 44:28

12. இஸ்ரவேல் வம்சம் – ஏசாயா 5:1,7 – 13. இஸ்ரவேலர் – ஏசாயா 5:18

14. ஏசாயா – ஏசாயா 7:14 – 15. கர்த்தர் – ஏசாயா 40:12

## 2015 ஜுலை மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சாந்தி
Sis. சுகந்தி தம்புக்குமார்
Sis. பிரியா பிரேம்குமார்
Sis. மரகதம் ஸ்டீஃபன்
Sis. டெய்ஸி எபிநேசர்
Sis. ஜோன் அசோக்குமார்
Sis. மெர்சிலின் தயா இயேசு ரெத்தினம்

Bro. ஜாண்ஸன்
Bro. கிறிஸ்டோபர். M
Bro. ஜாண்
Bro. ஆல்பர்ட்

"நிச்சயமாக நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து உன்னை பெருகவே பெருகப்பண்ணுவேன் ."(எபி– 6:14)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வி. பிரவீனா ரஞ்சிதம் ராஜாசிங்
செல்வி. லிடியா ஆரோக்கியதாஸ்
செல்வி. சாராள் சத்தியநாதன்
செல்வி. ஜெனோலின் ஜெரின்
செல்வி. மரியா ஷெர்லினா
செல்வி. தீபா ராஜன்
செல்வி. பிளஸ்சி பியூலா வில்சன்
செல்வி. ரின்சி வேளாங்கண்ணி

செல்வன். கிதியோன் செங்குட்டுவன்
செல்வன். அமீஸ் டேவிட்
செல்வன். ஞானசிகாமணி ஆசீர்வாதம்
செல்வன். மிருதுன்ராஜ் சதீஷ்குமார்
செல்வன். சுதன் தேவதாஸ்
செல்வன். விக்டர் செங்குட்டுவன்
செல்வன். ஜாண் ஜோஸ்வா மில்லர்
செல்வன். கெவின் அஸ்ரேய் ஆரோக்கியராஜ்

சகோதரி. சவரியம்மாள் சத்தியநாதன்
சகோதரி. ஜரின் நிஷா கிரன்குமார்
சகோதரி. மெர்லின் ரோஸ் ஷீலா
சகோதரி. ஷர்மிளா ஸ்ரீனிவாசன்
சகோதரி. ஜாய் மெட்டில்டா டேனியல்
சகோதரி. செலின் சோபினா மேரி டேவிட்
சகோதரி. ஷீலா இன்பராணி பக்தராஜ்
சகோதரி. சுபா ஸ்டீபன்
சகோதரி. அமுதா சுகுமாரன்
சகோதரி. ஜரின் செபாஸ்டின் ஜோசப்
சகோதரி. மரியா ஜாண்போஸ்கோ
சகோதரி. பெர்னத் அல்ஜியா மேரி தாமஸ்
சகோதரி. ஃபிலோமினா ஃபிரடரிக்

சகோ. ஆல்பர்ட் சிங்
சகோ. மணிராஜ்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி & திரு. அருள்மணி
திருமதி &திரு. ஜோசப் பாபுராஜ்
திருமதி & திரு. வில்சன் செல்லையன்
திருமதி & திரு. விசு
திருமதி & திரு. ராஜா ரவிச்சந்திரன்
திருமதி & திரு. டேனியல் மாணிக்கம்
திருமதி & திரு. ரவிஜாண் பீட்டர்
திருமதி &திரு. அற்புதராஜ்
திருமதி &திரு. மார்க் ஆன்டனி
திருமதி &திரு. ஃபிராங்கிளின்

# 2015 செப்டம்பர் மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
| --- | --- | --- |
| 06/09/2015 | சகோ. ஜெயசேகர் | சகோ. அசோக் குமார் |
| 13/09/2015 | சகோ. ஆரோக்கிய தாஸ் | சகோ.ஜெகநாதன் |
| 20/09/2015 | சகோ.ஸ்டாலின் | சகோ. சாமுவேல் தாசையா |
| 27/09/2015 | சகோ. டேவிட் ஜெயகுமார் | சகோ. ஜெயசேகர் |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4:30 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
| --- | --- | --- |
| 04/09/2015 | சகோ. வில்ஸன் | சகோ. டென்சிங் |
| 11/09/2015 | சகோ. ஐசக் துரை | சகோ. பிரேம்குமார் |
| 18/09/2015 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 25/09/2015 | குடும்ப ஆராதனை<br>சகோ. ஜஸ்டின் சுந்தராஜ் | சகோ. ஸ்டாலின் |

10/09/2015 முழு இரவு ஜெபம் இரவு 10 மணி முதல் காலை 2 மணி வரை
இடம் : பரிசுத்த பவுல் ஆலயம் (அஹமதி )

(25/09/2015 அன்று வாலிப ஐக்கிய கூடுகை மாலை 7 மணிக்கு
இடம் : புதிய ஜெப வீடு (பாஹூல்)

00/09/2015 - சகோதரிகள் ஐக்கிய கூடுகை
நாள் – இடம், நேரம் பின்னர் அறிவிக்கப்படும்

அக்டோபர் மாதம் இரண்டாவது வாரம் (09/10/2015) பொதுமன்ற கூட்டம்

# 2015 செப்டம்பர் மாதத்திற்கான வேத வினா!

### கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்

1. தன் ஆத்துமாவை கெடுத்து போடுகிறவன் இவன் யார்?
2. எது முக மலர்ச்சியை தரும்?
3. திரு வசனத்தை அவமதிக்கிறவன் நாசமடைவான் என்றது யார்?
4. ஜீவ வழியில் இருக்கிறவன் யார்?
5. ஜீவ பாதையில் வந்து சேராதவர்கள் யார்?
6. எவைகளை கழுத்திலே பூண்டு இருதயமாகிய பலகையில் எழுதவேண்டும்?
7. அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ அப்படியே அவனும் இருக்கிறான் என்று வாசிப்பதெங்கே?
8. வாலிபரின் அலங்காரத்தை குறித்து எங்கே வாசிக்கிறோம்?
9. யாருக்கு ஒரு கேடும் வராது?
10. பட்டினத்தில் தீ கொளுத்தி விடுகிறவன் யார்?
11. நீதிமான்களோடு கர்த்தருடைய இரகசியம் இருக்கிறது என்றவர் யார்?
12. அம்பு யாருடைய ஈரலை பிளந்தது?
13. பசியுள்ளவனுக்கோ கசப்பான பதார்த்தங்களும் தித்திப்பாய் இருக்கும் என்றது யார்?
14. சர்ப்பத்தால் கடிக்கப்பட்டவர்கள் யார்?
15. மூடனை உரலில் போட்டு உலக்கையினால் நொய்யோடே நொய்யாக குத்துவதை குறித்து எழுதியது யார்?

விடைகளை வருகின்ற 18-09-2015 க்குள் சபையின் செயலாளரிடமோ அல்லது செய்திமலர் பொருப்பாளரிடமோ நேரிலோ அல்லது (whatsup # 96667068 - with Name ) லோ அனுப்பும்படி (கொடுக்கும்படி) கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். விடைகளை **நீதிமொழிகள்** புத்தகத்தில் தேடி கண்டுபிடிக்கவும்

## - - -தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; - -

மத்தேயு 7:7

Praise the Lord

# ஞானம்

இவ்வுலகில் அதிக வருஷங்கள் வாழ்ந்த மெத்துசலாவை (969வருஷம்) பார்க்க உம்முடைய சாட்சிகள் என் தியானமாய் இருக்கிறபடியால் எனக்கு போதித்தவர்கள் –எல்லாரிலும் அறிவுள்ளவனாயிருக்கிறேன். எனவே வேத வாசிப்பை மற்ற நாட்களை விட பரீட்சை மற்றும் நேர்முக தேர்வு இப்படிப்பட்ட நாட்களில் அதிகப்படுத்துவோம்.

## வேத வசனங்களினால் வரும் ஞானம்

கர்த்தருடைய வேதம் குறைவற்றதும் ஆத்தமாவை, உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது கர்த்தருடையசாட்சி(வேதம்)சத்தியமும்,பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது.(சங்19:7)ஆடுகளை மேய்த்த தாவீது, முழு இஸ்ரவேலையும் ஆளத்தக்க ஞானத்தை பெற்றுக் கொண்டது எப்படி தெரியுமா? யுத்தங்களை வெல்ல விஷேசித்த ஞானத்தை பெற்றுக் கொண்டது எப்படி தெரியுமா? சங் 119:96,99,100ல் அதின் இரகசியத்தை சொல்லுகிறான்.நீர் உம்முடைய கற்பணைகளை கொண்டு என்னை என் சத்துருக்களிலும் அதிக ஞான முள்ளவனாக்குகிறீர். உம்முடைய சாட்சிகள் என் தியானமாய் இருக்கிறபடியால் எனக்கு போதித்தவர்களெல்லாரிலும் அறிவுள்ளவனாயிருக்கிறேன். உம்முடைய கட்டளைகளை, நான் கைகொண்டு இருக்கிறபடியால், ஞானமுள்ளவனாயிருக்கிறேன். எனவே, வேத வாசிப்பை மற்ற நாட்களை விட சோதனை நாட்களிலும் கூட்டுங்கள் காரிய சித்தி பெறுவீர்கள்.

## கர்த்தருக்கு பயப்படுதல் மூலம் ஞானம்

கர்த்தருக்கு பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம் என்று வாசிக்கிறோம்.(நீதி 1:7)யோசேப்பு என்ற வாலிபன் 'கர்த்தருக்கு பயந்து விரோதமாக பாவம் செய்வதுஎப்படி? என்று (ஆதி 39:9) கர்த்தருக்கு பயந்ததினால் விஷேசித்த ஞானத்தைபெற்றுக் கொண்டான்.தானியேல் என்ற வாலிபனும் கூட தேவனுக்கு பயந்து தன்னை தீட்டுபடுத்தாதபடி தீர்மானம் பண்ணியதால் கல்தேய வாலிபர்களைப் பார்க்கிலும் 10மடங்கு ஞானத்தில் சிறந்து விளங்கினான். நீங்களும் சிறந்து விளங்க வேண்டுமா? கர்த்தருக்கு பயப்படுங்கள்.தீமையை விட்டு விலகுங்கள்.

## ஜெபத்தினால் வரும் ஞானம்

யாக் 1 : 5ல் உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால் தேவனிடத்தில் கேட்க கடவன் அப்பொழுது அவனுக்கு கொடுக்கப்படும் என்று வாசிக்கிறோம்.1இராஜாக்கள் 4:29,30. தேவன் சாலொமோனுக்கு மிகுதியான

ஞானத்தையும் புத்தியையும், கடற்கரை மணலத்தனையான மனோவிருத்தியையும் கொடுத்தார்.சகல கிழக்கத்திப் புத்திரரின் ஞானத்தையும் எகிப்தியரின் சகல ஞானத்தையும் பார்க்கிலும் சாலொமோனின் ஞானம் சிறந்ததாயிருந்தது என்று வாசிக்கிறோம். தேவன் பட்சபாதமுள்ளவரல்ல. கேட்க்கிறவன் எவனும் பெற்றுக் கொள்கிறான், சாலொமோனுக்கு கொடுத்த அதே ஜீவனுள்ள தேவனிடம் கேட்போம் நமக்கும் கொடுப்பார்

## (ஞானத்தின்) ஆவியானவர் மூலம் ஞானம்

(ஏசாயா11:2)

பரிசுத்த ஆவியானவர் ஞானத்தையும் உணர்வையும் அருளுகிறார்.யோவான் 14:26ன் படி பரிசுத்த ஆவியானவர் எல்லாவற்றையும் உங்களுக்கு போதித்து நினைப்பூட்டுகிறார்.(யாத் 31:2-6) பெசலயேலை குறித்து வாசிக்கிறோம். அந்த வாலிபனை கர்த்தர் ஞானத்தினாலும் புத்தியினாலும் அறிவினாலும், நிரம்பும்படியாய் தேவ ஆவியானவர் அவன் மேலே இறங்கியிருந்தார். எனவே அந்த வாலிபன் வினோத வேலைகளையும் பொன் வெள்ளி வெங்கலம், இரத்தினம் மரத்தின் சித்திர வேலைகளையும்,யோசித்து செய்கிறதற்கு, வேண்டிய ஞானத்தை பெற்றிருந்தான். ஆகவே இது போல எவ்வளவு கடினமான சூழ்நிலைகள் நம்முடைய வாழ்க்கையில் காணப்பட்டாலும், அன்னிய பாஷையின் வரங்களை வாஞ்சித்து பெற்றுக் கொண்டு அந்நிய பாஷையில் பேசி அவரை ஆராதித்து, ஆவியானவரை சார்ந்து கொண்டு ஜெபித்தோமானால் சாத்தானால் வர இருக்கிற எந்த சோதனையிலும் தேவன் நமக்கு விலக்கு அளித்து நம்மை கர்த்தருக்குள் பெலப்படுத்துவார் அவர் தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியானவர் நம்மை தேற்றி காயங்களை ஆற்றி நம்மை ஸ்திரப்படுத்துவார். எனவே பரிசுத்த ஆவியானவரை ஒவ்வொரு நாளும் சார்ந்து கொள்ள மறவாதிருங்கள். இப்படி செய்ய நீங்கள் கவனமாயிருப்பீர்களானால் கர்த்தரும் உங்களை உயர்த்த கவனமாயிருப்பார் கர்த்தருக்கு பயப்படும்படி அவரிடத்தில் அதற்குண்டான ஞானத்தினால் நிரப்ப வாஞ்சிப்போம் தேவன் நம்மையும் ஞானத்தினால் நிரப்புவார் ஆமென்.

## வேத வல்லுநர்களுக்கு ஓர் சின்ன தற்பரிசோதனை

(வசனம் மற்றும் அதிகாரம் )

தேவ தூதனை கண்டு......
உபசரித்தது
முகங்குப்புற விழுந்து பணிந்தது
விண்ணப்பம் பண்ணினது
ஒளித்து கொண்டது
கேள்வி கேட்டது
கண்டு கலங்கியது
சாகவே சாவோம் என்று பயமடைந்தது

யார் ?

# டேவிட் ஐரு அடா லீ

மிஷனெரி வாழ்வில் ஒரே நாளில் தங்களது ஆறு பிள்ளைகளையும் இழக்கக்கொடுத்தும், ஊழியத்தில் இறுதிவரை நிலைத்து நின்ற மிஷனெரிக் குடும்பம் டி.ஹச். லீ குடும்பம். இந்த பேரிழப்பு வேறு எங்கும் நிகழ்ந்ததில்லை. இந்தியாவில் டார்ஜிலிங் என்ற இடத்தில், 1889, செப்டம்பர் 24-ம் தேதி நிலச்சரிவு ஏற்பட்டது. மிஷனெரி லீயின் ஆறு பிள்ளைகளும் டார்ஜிலிங்கில் ஒரு வீடு எடுத்து, தங்களது படிப்பைத் தொடர்ந்து கொண்டிருக்க, பெற்றோர்கள் வறுமையினால் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த வங்காளம் பகுதியிலுள்ள கொல்கத்தாவில் மிஷனெரிப்பணி புரிந்துகொண்டிருந்தனர். ஆறு பிள்ளைகளையும் இழக்கக் கொடுத்த மிஷனெரித் தாயான திருமதி அடா லீ அமெரிக்காவிலுள்ள வட வெரிஜீனியாவின் அழகிய மலைப் பகுதியின் சுமித்டன் நகரில் 1856-ம் ஆண்டு மார்ச் 23-ம் தேதி ஒரு ஈஸ்டர் தினத்தில் பிறந்தார். இவரது குழந்தைப் பருவத்தில் உள்நாட்டுப் போர் நடந்துகொண்டிருந்ததால் இவரது குடும்பம் அதிக வறுமை கடன் பிரச்சனையால் கஷ்டப்பட்டது. படிக்கவேண்டும் என்ற வாஞ்சை இருந்தும், இலவசக் கல்வி வசதியின்மை, அருகில் பள்ளி இல்லாதது போன்ற காரணங்களால் படிக்க முடியவில்லை. தனது 14-வது வயதில் தனது அத்தையின் உதவியினால் அவர்களது வீட்டிலே தங்கி கல்லூரிப் படிப்பை தொடர ஆண்டவர் அடாவுக்கு அனுக்கிரகம் செய்தார். தனது கல்லூரி நாட்களில் கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார்.

ஆண்டவருக்காக நான் எங்குவேண்டுமானாலும் போவேன் என்று உறுதியளித்து தனது வாழ்க்கையைப் பரமபிதாவின் கையில் அர்ப்பணித்தார். ஒரு சாட்சியுள்ள வாழ்க்கையுடன், திருச்சபையின் பணிகளிலும் ஆத்தும ஆதாயப்பணியிலும் ஈடுபட்டார். மிஷனெரிப் பணிகளை நன்றாக அறிந்துகொள்ள பழம்பெரும் மிஷனெரிகளின் சரிதைகளை வாங்கி ஆவலுடன் வாசித்தார். 1874-ம் ஆண்டு ஒரு பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தபோதும் உள் மனதில் இந்தியாவிற்கு மிஷனெரியாகச் செல்ல தான் அர்ப்பணித்ததை அவர் மறந்துவிடவில்லை. அடாவின் தாய் தனது மகளின் அர்ப்பணிப்பை அறிந்திருந்தும் தன்னுடனேயே அவள் இருக்கவேண்டும் என்றே விரும்பினார்கள். ஆனால் அழைத்த தேவன் உண்மையுள்ளவர். இவருக்கு ஊழியப்பாதையில் திறந்த வாசலைத் திறந்தார். நியூயார்க்கிலுள்ள அமெரிக்க ஐக்கிய மிஷனெரி ஸ்தாபனம் கிழக்கு தேசத்திற்கு பெண்கள் மத்தியில் சுவிசேஷம் சொல்ல பெண் மிஷனெரிகளை அனுப்பத் தீர்மானித்தது. அவ்வியக்கச் செயலாளர் அடா ஜோன்ஸை கல்லூரி நாட்கள் முதலே அறிந்து இருந்ததால், இன்னும் 3 வாரத்துக்குள் கடற்பயணத்திற்கு ஆயத்தமா இருக்கச் சொன்னார். இவர்களது கப்பல் 1876-ம் ஆண்டு டிசம்பர் 22-ம் தேதி வந்தடைந்தது. உடனே அடா ஜோன்ஸ் கொல்கத்தாவிற்கு மிஷனெரியாக அனுப்பப்பட்டார். வங்காள மொழியை நன்றாகக் கற்றுக்கொண்டார். அலகாபாத் நகரத்தில் வங்காள பெண்கள் மத்தியில் பணிபுரிய ஆரம்பித்தார்.

இவருடன் கல்லூரியில் படித்த டேவிட் லீ என்பவர் வேறொரு மிஷனெரி இயக்கம் மூலம் இந்தியாவிற்கு மிஷனெரியாக வந்து லக்னோ பகுதியில் ஊழியம் செய்துகொண்டிருந்தார். இருவரும் ஒருவரையொருவர் விரும்ப, டேவிட் லீயுடன் அடா ஜோன்ஸ் திருமணம் 1881-ம் ஆண்டு சென்னையிலுள்ள வேப்பேரி மெதடிஸ்ட் ஆலயத்தில் நடைபெற்றது. பிறகு பெங்களூரில் போதகராக டேவிட் லீ பணியாற்றினார். தங்களது முதல் மகள் பிறப்பிற்கு பிறகு டேவிட் லீ அதிக பலவீனப்பட்டதால் நியூயார்க்குக்கு குடும்பமாகத் திரும்பினார்கள். அங்கும் மலேரியாவால் அதிகக் கஷ்டப்பட்டார். ஆனால் இவர்களது இருதயமோ இந்தியாவிற்காக பாரத்துடன் இருந்தது. 1894-ம் ஆண்டு மறுபடியும் தங்களது ஆறு பிள்ளைகளுடன் கல்கத்தா வந்து சேர்ந்தனர்.

அங்கு வறுமையில் வாடிக்கிடந்த வங்காள குழந்தைகளுக்கு சேவை செய்வதற்காக இவர்கள் நியமிக்கப்பட்டனர். 3 வங்காள சிறுமிகளுடன் ஒரு சிறிய விடுதியை ஆரம்பித்தனர். வங்காளத்திலுள்ள நாடியா மாவட்டத்தில் பெரிய பஞ்சம் ஏற்பட்டபோது அதிக அளவில் பட்டினிப் பசிக்குத் தப்ப சிறுமிகள் விடுதியில் சேர ஆரம்பித்தனர். 1899-ம் ஆண்டில் 100 சிறுமிகள் இவர்கள் பள்ளியில் படித்தனர். லீ குடும்பத்தில் ஆறு பிள்ளைகளும் குளிர்காலத்தில் கொல்கத்தாவிலும், கோடைகாலத்தில் டார்ஜீலிங்கிலும் படித்து வந்தனர். தேவபக்தியிலும் ஒழுக்கத்திலும் பிள்ளைகளை வளர்த்து வந்த லீ, இவர்கள் தங்கள் வாழ்வில் கிறிஸ்துவைத் தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளவும் எல்லாவிதத்திலும் உதவினர். இவர்களது மூத்த மகள் 17 வயது நிரம்பிய பொறுப்புள்ளவளாக இருந்ததால் அவளது பராமரிப்பில் டார்ஜிலிங்கில் ஒரு வீடு எடுத்து தனது தங்கை தம்பிகளுடன் சேர்ந்து அங்குள்ள கல்லூரி, பள்ளிகளில் படித்து வந்தனர். அவர்களுக்கு உதவி செய்ய ஒரு வங்காளப் பெண்ணும் அவர்களுடன் தங்கியிருந்தாள்.

1899-ம் ஆண்டு 36 மணி நேர அடைமழைக்குப் பின் ஏற்பட்ட புயல் காற்று நிலநடுக்கத்தினால் வீடு அசைய ஆரம்பித்த போது பிள்ளைகள் வீட்டிற்கு வெளியே ஓடி வந்தனர். ஆனால் எங்கும் இருட்டு, புயல் காற்றினால் பாதையும் மண் சரிவினால் மூடப்பட்டு இருந்தால் மறுபடியும் வீட்டில் இருந்ததால் பாதுகாப்பு இருக்கும் என்று வீட்டில் நுழைந்து ஜெபித்துக்கொண்டிருந்தபோதே வீடு நிலச்சரிவினால் மண் அடியில் புதையுண்டு போயிற்று, அனைவரும் மரித்தனர். அடுத்த நாள் காலையில் வில்பர் என்ற மகன் மட்டும் குற்றுயிராய்க் கண்டுபிடிக்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனையின் அனுமதிக்கப்பட்டான். அவன் இறப்பதற்குமுன் லீயும் அவரது மனைவியும் இந்த நிலச்சரிவு எப்படி ஏற்பட்டது என்றும் மரிப்பதற்கு முன் தாங்கள் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்தது பற்றியும் அவனது வாய் மூலம் கேட்டறிந்தனர். அவனது நல்லடகத்திற்கு பிறகு மனம் பேதலிக்காமல் அழைத்த தேவன் உண்மையுள்ளவர் என்ற வாக்குக் கேற்ப மறுபடியும் கொல்கத்தாவிற்கு வந்து தங்களது ஊழியத்தை முழு மூச்சுடன் தொடர்ந்தனர்.

"தேவன் பேரிலுள்ள உறுதியான விசுவாசமும், ஊழியத்திற்கான தைரியமும் அவர்களை தொடர்ந்து தேவப்பணியில் அவர்களை நிலைநிறுத்தியது. 1909-ம் ஆண்டு வெல்லிங்டன் சதுக்கம் என்ற ஒரு பெரிய கட்டிடத்தைக் கட்டி ஊழியத்திற்காக அதை பிரதிஷ்டை செய்தனர். ஆண்டவர் கிருபையாக லீ தம்பதியினருக்கு மீண்டும் பிராங்க், ஆல்பர்ட் என்ற இரு மகன்களைத் தந்தார். 1924-ம் ஆண்டு டேவிட் லீ சுகவீனப்பட்டு தனது 74-வயதில் மரித்துப்போனார். இவருக்குப் பின் அடாலீ முழு பொறுப்பையும் தைரியத்துடன் எடுத்துச் செயல்பட்டார். வங்காள காசநோய் தடுப்பு இயக்கத்தில் அதிகப் பொறுப்பு ஏற்று தீவிரமாகச் செயல்பட்டதால் அடாலீக்கு அரசாங்கமே தங்க பதக்கம் பரிசளித்து அவரைக் கௌரவித்தது. 1943-44-ல் ஏற்பட்ட வங்காளதேச பஞ்சத்தின் போதும் பசியினால் வாடிய 522 குழந்தைகளை ஆதரித்தனர். இவர்களது விடுதியில் படித்த அனைத்துப் பிள்ளைகளும் சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு மாற்றப்பட்டார்கள். ஒருவர் பிஷப்பாக மாறினார். 3 சிறுமிகள் கிறிஸ்தவ உயர்நிலைப்பள்ளிகளில் தலைம ஆசிரியராகவும், பலர் ஆசிரியர்களாகவும் மாறினர். பல சிறுவர்களின் மாற்றத்திற்குப் பின்னணி லீ தம்பதியினரின் விசுவாசமும், தேவ பணிக்காக அர்ப்பணித்த அவர்களது வாழ்வுமே. 1948-ம் ஆண்டு ஜீன் மாதம் 11-ம் தேதி அடா லீ தேவனுடைய ராஜ்ஜியம் சேர்ந்தார். இவர்களது பெயரிலே லீ ஞாபகார்த்த மிஷன் "The lee Memorial Mission" என்ற ஊழியம் தொடர்கிறது.

தொகுப்பு கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரர் – **சுகுமார்**

# தந்திரமுள்ளவன்

கர்த்தருக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்களை கூறிக்கொள்கிறேன். கர்த்தர் கொடுத்த இந்த வார்த்தையை உங்களோடு பகிர்ந்த கொள்வதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன் .

தந்திரம் என்று சொன்னவுடன் நமக்கு முதலில் நினைவில் வருவது நரிதான், ஏனெனில் கதைகளில் வாசித்தும், நம் முன்னோர்கள் சொல்ல கேட்டும் இருக்கிறோம்.

வேதாகமத்தில் பார்க்கும் போது நம்முடைய நினைவுக்கு வருவது சர்பம் (தேவனாகிய கர்த்தர் உண்டாக்கின சகல காட்டு மிருகங்களை பார்க்கிலும் சர்ப்பமானது தந்திரமுள்ளதாயிருந்தது அது ஸ்திரியை நோக்கி நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருச்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது.( ஆதி 3:1)

சர்ப்பமானது அதினுடைய தந்திரமான பேச்சினால் ஏவாளை வஞ்சித்து கர்த்தர் புசிக்க கூடாது என்ற கனியை ஏவாள் புசித்து, அதை ஆதாமுக்கு கொடுத்ததின் நிமித்தம், பூமி அவர்கள் நிமித்தமாக சபிக்கப்பட்டது, ஏதேன் தோட்டத்தை அனுபவிக்க முடியவில்லை தேவன் இவர்களை துரத்திவிட்டார்.

அன்பு சகோதரிகளே சர்பத்தை போன்ற தந்திரமுள்ளவர்கள் நம்முடைய குடும்பத்திலும் தலையிட்டு நன்மை செய்வது போல நடித்து குடும்பங்களை பிரித்து விடுவார்கள் தேவையில்லாத ஆலோசனையை கொடுத்து குடும்பங்களில் சண்டைகளையும் குழுப்பங்களையும் உண்டாக்கிவிடுவார்கள்.

ஆலோசனையும் மெய்ஞானமும் என்னுடையவைகள், நானே புத்தி, வல்லமை என்னுடையது (நீதி 8:14)

நாம் கர்த்தர் கொடுத்த புத்தியை பயன்படுத்தவோம், கர்த்தரிடத்தில் ஆலோசனை கேட்டு எல்லா காரியங்களையும் செய்வோம்

யோனதாப் இவன் மகா தந்திரவாதி என்று (2சாமு 13:3)வாசிக்கிறோம். அதற்கு அவன் உன் சகோதரன் தந்திரமாய் வந்து உன்னுடைய ஆசீர்வாதத்தை பெற்று கொண்டான் என்றான் (ஆதி 27:35)

இங்கு ஏசாவை பார்க்கும் போது அவனுடைய ஆசீர்வாதத்தை அவனுடைய தம்பி யாக்கோபு தந்திரமாய் பெற்றுக்கொண்டான்.

லௌதிக ஞானத்தினாலும், மாய்மான தந்திரத்தினாலும் ஒருவனும் உங்களை கொண்டுபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் அதுமனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலக வழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவை பற்றியதல்ல (கொலே 2:8)

விபசார மயக்கத்தால் நிறைந்தவைகளும், பாவத்தை விட்டோயாதவைகளுமாயிருக்கிற கண்களையுடையவர்கள்; உறுதியில்லாத ஆத்துமாக்களைத் தந்திரமாய்ப் பிடித்து, பொருளாசைகளில் பழகின இருதயத்தையுடைய சாபத்தின் பிள்ளைகள்.(2 பேது 2:14 )ல் இப்படியாக வாசிக்கிறோம்

2 பேது 2:18ல் இப்படியாக வாசிக்கிறோம். வஞ்சகமாய் நடக்கிறவர்களிடத்திலிருந்து அரிதாய்த் தப்பினவர்களிடத்தில் இவர்கள் அகந்தையான வீண்வார்தைகளைப் பேசி, மாம்ச இச்சைகளினாலும் காம விகாரங்களினாலும் அவர்களைத் தந்திரமாய்ப் பிடிக்கிறார்கள்.

கிறிஸ்துவுக்குள் அன்பானவானவர்களே நாம் முன் தியானித்தது போல சர்பம் போல் நம்முடைய வாழ்க்கையிலும் நமக்கு நன்மையானதை செய்வது போலவே நம்மை தர்மசங்கடமான நிலையில் நிறுத்தி நம்மையும் நம் குடும்பத்தையும் நம்முடைய சொந்த வாழ்க்கையையும் மற்றவர்கள் ஏளனமான பேச்சிற்கு ஆளாக்கி நம்மை வெட்க்கபடுத்துவதுதான் இந்த தந்திரக்காரனின் சூழ்ச்சி

இதே போல வாலிப சகோதர சகோதரிகளின் வாழ்க்கையிலும் நாம் (2பேதுரு 2:18)ல் வாசித்தது போல நம்மிடத்தில் வீண் வார்த்தைகளை பேசி மாமிச இச்சைகளினாலும் காம விகாரத்தில் நம்மை தந்திரமாய் பிடித்து, நம்மை ஆண்டவருடைய பாதத்தில் இருந்து எளிதாய் பிரித்துவிடும் தந்திரகாரன். விபசாரத்தினாலும், தன்னுடைய வாழ்க்கையில் உறுதியில்லாத ஆத்துமாக்களை பிடித்து, பொருளாசைகளினால் நம் ஜீவனை நஷ்டபடுத்தும் தந்திரக்காரன்.

பிரியமான சகோதரனே, சகோதரரியே நம் தேவன் கன்மலை அவர் மேல் நம் நம்பிக்கையெனும் வீட்டை கட்டுவோம் அவரிடத்தில் ஆலோசனை பெறுவோம், அவர் யோசனையில் பெரியவர், செயலில் மகத்துவமானவர். அவரிடம் நாம் ஆலோசனை கேட்போம், உலகத்தின் ஆலோசனையை உதறி தள்ளுவோம். அதை நாம் பெரிதாக்கும் போது ஆவிக்குறிய வார்த்தைக்கு நாம் முக்கியத்தவம் தராமல் போய்விடுகிறது, அதினால் ஆண்டவருடைய அன்பை நாம் இழந்துவிடுகிறோம் பிரியமானவர்களே,

ஆண்டவர் சொல்லை கேட்போம், ஆண்டவர் பாதம் பணிவோம், ஆண்டவர் பணிசெய்வோம், தந்திரகாரரரின் சகவாசம் விட்டு விலகி, ஆண்டவருக்கு பிரியமாய் வாழ்வோம்.

கர்த்தர் இந்த வார்த்தையை உறுதிபடுத்தி நம் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக

கிறிஸ்துவுக்குள் அன்பு சகோதரி. **டெய்ஸி எபிநேசர்**

# கடந்த மாத நிகழ்வுகளில் தங்கள் பார்வைக்கு சில

## முழு இரவு ஜெபத்தில் வாலிபர் பகுதி









## உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்காக ஜெபியுங்கள்

### செயற்குழு உறுபபினர்கள்


**தலைவர் – சகோ. ரவிச்சந்திரன்**

23913675 - 66889706

**செயலாளர் – சகோ. ஜெயசேகர்**

23711698 - 96646444

**பொருளாளர்– சகோ. ஆரோக்கியதாஸ்**

99870126

**வாலிப ஐக்கிய தலைவர் – சகோ. அற்புதராஜ்**

60692485

Church Website Address - ahmaditamilcongregation.org

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait


**தங்களது ஜெப விண்ணப்பங்கள்**
**எதுவாக இருந்தாலும்**
**எங்களுக்கு தெரிவிக்கவும்**
**உங்களுக்காக ஜெபிக்க**
**ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.**


Private Circulation only